# MEDITATION

## EXPERIENCE



தியான அனுபவம்*
திருமதி. பூர்ணிமா பெங்களூர்

வணக்கம் நண்பர்களே, ஆசான்மார்களே மற்றும் கடவுள்மார்களே! நான் பூர்ணிமா, தியான ஆசிரியர் மற்றும் பெங்களூரைச் சேர்ந்த டாரட் கார்டு ரீடர். நான் கடந்த 23 ஆண்டுகளாக PSSM உடன் தொடர்புடையவள். 2021 மே 26, பெங்களூரில் உள்ள மைத்ரேய புத்த பிரமிடுக்குள் 'புத்த பூர்ணிமா' பௌர்ணமி இரவில் நான் பெற்ற எனது தியான அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். நமது அன்பிற்கினிய ஆசான் பிரம்மர்ஷி பிதாமஹா பத்ரிஜி அவர்கள் மற்ற இசைக்கலைஞர்களுடன் சேர்ந்து புல்லாங்குழல் வாசித்தார். நாங்கள் இரவு 9 மணி முதல் 12 மணி வரை சுமார் 25 பேர் தியானம் செய்து கொண்டிருந்தோம். நான் கண்களை மூடியபடியே, ஆசான் இயேசு கிறிஸ்து பிரமிடிற்குள் நுழைவதைக் கண்டேன். எனது அனுபவத்தை நான் பலரிடம் வாய்மொழியாகப் பகிர்ந்தபோது, அவர்களில் சிலர் என்னிடம், "இயேசு எப்படி இருந்தார்?" என்று கேட்டனர். நான், "அவரை சதை மற்றும் ரத்தமாகப் பார்த்தேன்" என்று பதில் அளித்தேன். அவர் பத்திரிஜியைப் போல உயரமாக இருந்தார். அவர் கிங்ஸ் அறைக்கு அடியில் பத்ரிஜிக்கு எதிரே அமர்ந்தார்.

நான் அவரைப் பார்த்தபோது, அவர் என்னை அவரது கண்களுக்குள் ஊடுருவிப் பார்க்குமாறு சொன்னார். அடுத்த வினாடி நான் அவரது கண்களுக்குள் என்னை கண்டேன். பின்னர் அவரது கண்கள் சந்தித்த இடத்தைப் பார்த்தேன். அது ஒரு பொன்னான பாதை. சுரங்கப்பாதைபோல திறப்பு. இது அவரது மூன்றாவது கண்ணுக்கு என்னை இட்டுச் சென்றது! ஓ! என்ன ஒரு பார்வையை நான் கண்டேன்! அது உண்மையில் அற்புதமானது! நான் அவரது மூன்றாவது கண்ணுக்குள் நுழைந்தேன். நான் ஒரு இடத்தில் என்னை கண்டேன். அது மலைகளால் சூழப்பட்ட ஒரு பெரிய இடம். பின்னர் எல்லா விலங்குகளையும், ஒரு செல் உயிரினத்திலிருந்து எல்லா பெரிய விலங்குகளையும் பார்த்தேன். பூமியில் இங்கே உணவுக்காக கொல்லப்பட்டு சாப்பிடப்பட்ட அனைத்து விலங்குகளும் இயேசு கிறிஸ்துவை அடைக்கலம் புகுந்தன.
பின்னர், நான் அதிலிருந்து வெளியே வந்தேன். "பிரமிடுக்குள் யார் இருக்கிறார்கள்" என்று இயேசு கிறிஸ்து என்னிடம் கேட்டார். முதலில், மேடம் லிண்டா குட்மேன் இயேசு கிறிஸ்துவின் அருகில் அமர்ந்திருப்பதைக் கண்டு நான் ஆச்சரியப்பட்டேன். பின்னர் புனித தியாகராஜர் மற்றும் சிறந்த இசைக் கலைஞர்களான முத்துசாமி தீட்சிதர் மற்றும் சியாமா சாஸ்திரி போன்றவர்களையும் கண்டேன். அந்த மூவரும் கர்நாடகா இசையின் முப்பெரும் கலைஞர்களாக குறிப்பிடப்பட்டனர். அப்போது நான் சிறந்த ஆசான்களான ஆதிசங்கராச்சாரியார், லோப்சங் ராம்பா, ஓஷோ, பரமஹம்ச யோகானந்தர், யுத்தேஸ்வர் கிரி மற்றும் லாகிரி மகாசாயர் ஆகியோரைப் பார்த்தேன். பகவான் கிருஷ்ணர் கிங்ஸ் அறைக்கு அடியில் நிற்பதையும் பார்த்தேன். அவருக்குப் பிறகு நான் அனைத்துப் பாண்டவர்களையும், கௌரவர்களையும் கண்டேன். அப்போது எனக்கு மிக நீண்ட கூந்தலுடன் ஒரு பெண்ணின் காட்சி கிடைத்தது. அவர் யார் என்று தெரிந்து கொள்ள எனக்கு ஆர்வமாக இருந்தது. என் இனிமையான 'ஆனந்தமயி அம்மா' அவர் என்பதைக் கண்டேன். அவரது கண்கள் பிரகாசமான தங்க ஒளியுடன் பிரகாசித்தன. அவர் டெல்லியைச் சேர்ந்த மூத்த பிரமிட் மாஸ்டரான திருமதி. வசந்த சாஸ்திரி அவர்களின் அருகில் அமர்ந்தார்.

இமயமலையைச் சேர்ந்த ஒரு சிறந்த ஆன்மிக மாஸ்டர் சுவாமி ராமாவைப் பற்றி நான் நினைத்தேன், அவரை என் வலது புறத்தில் கண்டேன். எனது பெரிய பாட்டிகளையும் பார்த்தேன்.

நான் அவர்களை உடல் ரீதியாகப் பார்த்ததில்லை, என்றாலும் என்னால் அவர்களை அடையாளம் காண முடிந்தது. பின்னர் பத்ரிஜி அவர்களின் இருபுறமும் மேடம் பிளேவட்ஸ்கியும் மற்றும் மேடம் அன்னிபெசண்டும் அமர்ந்திருப்பதைக் கண்டேன். பின்னர் நான் சீன ஆசான்களான லாவோ ட்சூ மற்றும் சுவாங் ஜூ ஆகியோரைப் பார்த்தேன். பின்னர் காந்திஜி பிரமிடிற்குள் நுழைவதைக் கண்டேன். அவர் நேராக மேடம் அன்னி பெசண்ட் இடம் சென்று அவரை வாழ்த்தினார். எல்லா முதுநிலை ஆசிரியர்களையும் ஒரே நேரத்தில் பார்ப்பது அவ்வளவு பெரிய உணர்வு! பிரமிடினுள் சத்திய லோக உணர்வு எனக்கு இருந்தது.

அந்த மகத்தான ஆசான்கள் அனைவரும் நம் அனைவருக்கும் கொடுக்க விரும்பிய செய்தி என்னவென்றால், "இந்த புத்த பூர்ணிமா, பூமியை மூன்றாவது பரிமாணத்திலிருந்து ஐந்தாவது பரிமாணத்திற்கு இட்டுச் செல்வதற்கான ஒரு பெரிய மாற்றத்திற்கான தொடக்கமாக இருக்கப் போகிறது. எனவே நாம் அனைவரும் அதை விரைவில் காண்பதற்காக இங்கு இதை கொண்டாடுகிறோம்.

இந்த அனுபவத்தை நான் பெற்றது உண்மையில் அதிர்ஷ்டம் என்று நினைக்கிறேன். இந்த அனுபவம் யாரால் எனக்குக் கிடைத்தது என்றால், அவரது புல்லாங்குழல் இசை மூலம் தனது ஆற்றலை எனக்கு வழங்கிய பிரம்மர்ஷி பிதாமஹா பத்ரிஜி அவர்களால்தான். அவருக்கு நான் மிகவும் நன்றி கூறுகிறேன்!

/ முற்றும் /

- திருமதி. பூர்ணிமா, பெங்களூர்
- **(** "தியானப் பிரபஞ்சம்" இதழிலிருந்து **)**